# ஆண்டின் பொதுக்காலம் 8 ஆம் வாரம்

## முதலாவது திருவழிபாடு ஆண்டு

### இன்றைய வாசகங்கள்:

இறைவாக்கினர் எசாயா நூலிருந்து வாசகம்.49:14-15,

திருப்பாடல்: 62: 1-2. 5-8,

**பல்லவி:** என் நெஞ்சே கடவுளுக்காக மௌனமாய்க் காத்திரு.

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 4:1-5,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 6: 24-34)

### திருப்பலி முன்னுரை:

நெஞ்சே கடவுளுக்காக மௌனமாய்க் காத்திரு. ஏனெனில், நான் எதிர்பார்க்கும் நலன் வருவது அவரிடமிருந்தே. உண்மையாகவே, என் கற்பாறையும் மீட்பும் அவரே. எனவே, நான் சிறிதும் அசைவுறேன்!

திருமகன் இயேசுவின் அன்பு மக்களனைவருக்கும் என் பணிவான வணக்கங்களும், வாழ்த்தும் உரியனவாகுக. ஆண்டின் பொதுக்கால எட்டாம் வார திருப்பலி. இந்த ஆண்டு தவக்காலத்திற்கு முந்திய வாரமாக அமைகிறது. ஆண்டவராகிய கடவுள் நம்முடன் தன் வாழ்வைப் பகிர்ந்து கொண்டதோடல்லாமல் நமக்குத் தேவையானதெல்லாம் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி மிக முகாமையானது. கடவுள் தன் மக்கள் மீது கொண்டுள்ள அன்பு அருள் நலம் வழங்கும்பணியாக, நீட்சி கொண்டு விளங்குவதையும் இந்த வார இறைமொழிகள் வழி திரு அவை நமக்கு உணர்த்த விழைகிறது.

நமக்கு மீட்பு கிடைப்பது அவரிடமிருந்தே, நம் கற்பாறையும், மீட்பும்,கோட்டையும் அவரே, தேவையற்ற கவலைகள் துன்பத்தையே தரும். இறை விசுவாசம் நிறைவைத் தரும் என்பவையே இன்று நமக்கு வழங்கப்படும் நல்ல செய்திகளாக இருக்கின்றன. எனவே நாம்: பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்னும் இறைவனின் வாக்குறுதியில் நம்பிக்கை கொண்டவர்களாக, என் நெஞ்சே கடவுளுக்காக மௌனமாய்க் காத்திரு என்னும் அசையாத உறுதியோடு வாழ இத் திருப்பலியில் வல்லமை கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. ஞானத்தின் ஊற்றே இறைவா,**

வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களிலும் உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒரு நாளே மேலானது என்ற இறைவாக்குக்கு இணங்க செயல்படும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் தீயசக்திகளிடமிருந்து பாதுகாத்து நல்ல உடல் சுகத்தையும் ஆன்மீகப் பலத்தையும் பாதுகாப்பையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. அனைவருக்கும் இன்முகம் காட்டும் தந்தையே இறைவா!**

கிறிஸ்துவின் சீடர்களாகிய நாங்கள் எமக்கு மீட்பு கிடைப்பது உம்மிடமிருந்தே, எம் கற்பாறையும், மீட்பும், கோட்டையும் நீரே என்னும் உண்மையையும், தேவையற்ற கவலைகள் துன்பத்தையே தரும் என்பதையும் உணர்ந்து உறுதியான விசுவாத்தோடு வாழும் வரத்தினை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. அனைவரின் தேவைகளையும் அறிந்துள்ள தந்தையே இறைவா!**

எமது குடும்பங்களில் உள்ள அனைத்துக் கவலைகளையும், தேவைகளையும், குறைபாடுகளையும் நீரே அறிந்திருக்கின்றீர். ஆண்டவரே! அவற்றையெல்லாம் நீரே தீர்த்து குடும்பங்களில் அமைதியும், நல்லுறவும் நிலைபெறச் செய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. என்றும் மாறாப் பேரன்பு கொண்ட எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களில் சகோதர பிணைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்திடவும், உறவுகள் மேன்படவும், தூய ஆவியின் கொடைகள் எம் இல்லங்களில் தங்கி எம் இல்லத்திலுள்ள அனைவரையும் வழி நடத்திடவும், வேற்றுமைகள் ஒழிந்து, மன்னிப்பே மாண்பு என்பதை உணர்ந்து வாழ்ந்திட அருள்மாரிப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை இறைஞ்சுகின்றோம்.

**5. கருணைக் கடலாகிய எம் இறைவா!**

புதிய வாழ்வை எதிர்நோக்கியிருக்கும் எம் இளையோர்களை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். அவர்கள் எதிர்பார்த்திருக்கும் வளமான வாழ்வு, சிறந்த வேலைவாய்ப்பு, உயர்கல்விக்கான தேவையான தரமான கல்விகூடங்களில் அனுமதி, பொருளாதார உதவிகள் மற்றும் உள்ள உடல் உறுதியை வழங்கிடத் வேண்டுமென்று இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**6. நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கும் தந்தையே இறைவா!**

பல்வேறு விதமான நோய்களால் பாதிக்கப்பட்டு வேதனையோடும், கவலையோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களைக் குணப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**7. வளங்களின் நிறைவே எம் இறைவா!**

எம் பங்கைச் சார்ந்த அனைத்து மக்களையும் ஆண்டுப் பராமரித்து, நற்சுகமும், வளமும் பொழிந்து அனைவரின் குடும்பங்களும் உமது பேரன்பை நிறைவாய் பெற்று உம் அன்னையைப் போல உம் சீடர்களாய் வாழ்ந்திடவும், திருமுழுக்கின்போது நாங்கள் பெற்றுக் கொண்ட உப்பையும் ஒளியையும் நாங்கள் வாழும் இடங்களில் மற்றவர்களுக்கு வழங்கிடத் தேவையாக வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை வேண்டுகிறோம்.